1982 பிப்ரவரி 17]

திரு. பாபு ஜனார்த்தனன்: தலைவர் அவர்களே, விவசாய உற்பத்தியாளர்கள் சங்கம் என்ற பெயர் மாற்றத்திற்காக மகிழ்ச்சிதான். ஆனால் தற்போது இடைத்தரகர்கள் மூலம் நெல் விற்பனையிலே இருக்கின்ற லெவியினை முதலாளிகளிடமிருந்து பெறாமல் விவசாயிகளிடத்திலே இருந்து பெறுகின்ற நிலைமை இருக்கின்றது. இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். விவசாய உற்பத்தியாளர் சங்கம் என்று ஏற்படுகின்றபோது இப்படிப்பட்ட முறைகள் எல்லாம் இல்லாமல் விவசாயிகளுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய விலை நேரடியாகக் கிடைப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய நல்ல யோசனை ஏற்கெனவே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது, ஆனால் விவசாயிகளிடம் லெவி வாங்குகிறார்கள் என்று நான் கருதவில்லை, வியாபாரிகளிடம்தான் லெவி வாங்குகிறார்கள். ஆனால் கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கம் அதனுடைய அங்கத்தினர்களான விவசாயிகளிடம் இருந்து நேரடியாக கொள்முதல் செய்து அவர்களே அதை நுகர்பொருள் கூட்டுறவு அங்காடிகள் மூலமாக விற்பனை செய்கிறபோது கண்டிப்பாக விவசாயிகளுக்கு அதிகப்படியான லாபம் கிடைக்கின்றது. ஒரு சப்போர்ட் ப்ரைஸ் ஆரம்பத்தில் கொடுக்கப்பட்டு விற்பனையிலே அதிகப்படியான லாபம் கிடைக்குமேயானால் அந்த லாபம் கூட ரிபேட்டாக மீண்டும் விவசாயிகளுக்குச் சென்று சேர வேண்டும் என்று கூட அரசு தற்போது நடவடிக்கை எடுத்திருக்கிறது.

தமிழ்நாட்டில் பயன்படுத்தப்படும் முத்திரைத் தாள்கள்

*வினா எண். 230 திரு. ச. அங்குசாமி: மாண்புமிகு கூட்டுறவு, சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) தமிழ்நாட்டில் பயன்படுத்தப்படும் முத்திரை கட்டணத்தாளில் (Court fee stamp) ஆங்கிலமும், இந்தியும் இருக்கிறது என்பதை அரசு அறியுமா?

(ஆ) அதில் தமிழ்மொழி இடம்பெற அரசு நடவடிக்கை எடுக்குமா?

(இ) மற்ற மாநிலங்களில் தாய்மொழி இடம் பெற்றிருப்பதை அரசு உணருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) ஆம்.

[1982 பிப்ரவரி 17

(ஆ) முதுநிலை துணை பொது மேலாளர், மத்திய முத்திரைத்தாள் கிடங்கி, நாசிக், முத்திரைத் தாளில் தமிழ் இடம் பெறுவதைக் குறித்து ஆராய்ந்து அனுப்பும்படி கேட்கப் பட்டுள்ளது.

(இ) மற்ற மாநிலங்களில் ஆங்கிலமும், இந்தியும் மட்டுமே தவிர, வேறு எந்த மாநில மொழிகளும், முத்திரைத் தாளில் அச்சு செய்யப்படவில்லை.

திரு. ச. அங்குசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே பேரவைத் தலைவர் அவர்களே, எங்கும் தமிழ், மாண்புமிகு எதிலும் தமிழ் என்று நமது அரசு கொள்கை எடுத்திருக்கிறது. ஏற்கெனவே 1.50 பைசா என்று தமிழிலே முத்திரைத் தாள்களில் பொறிக்கப் பெற்றிருந்ததே. இப்பொழுது அதிலே இந்தியும், ஆங்கிலமும் இடம் பெறுவதற்குக் காரணம் என்ன? அந்த நிலையை அரசு விளக்க முடியுமா என்று கேட்க விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோர்ட்ஃபீ ஸ்டாம்பைப் பொறுத்த வரைக்கும் எப்பொழுதுமே தமிழில் இருந்தது இல்லை. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது காபி ஸ்டேம் பேபர் என்று கருதுகிறேன். அதிலே தமிழில் தான் இருந்து வருகிறது. ஆனால் அதிலும்கூட இந்த மொழியில் தான் இருக்க வேண்டும் என்று முடிவு செய்யக்கூடிய அதிகாரம் நம்மிடம் இல்லை. மாநில அரசு தமிழில்தான் இருக்க வேண்டும் என்று வற்புறுத்தியது. ஆனால் ஒரு சீரான அமைப்பு பாரதம் தழுவிய அளவிலே இருக்க வேண்டும் என்ற எண்ணத்தைச் சொல்லி, ஆங்கிலமும், இந்தியும் ஆகிய இரு மொழிகளிலே முத்திரைத் தாள்களில் இடம் பெற வேண்டும் என்று மத்திய அரசு முடிவு செய்திருக்கிறது.

காபி ஸ்டேம்ப் பேப்பரில் மட்டும் தான் தமிழிலே இருந்து வருகிறது. அதைக்கூட இந்தியிலே கொண்டு வர வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால் அதை நாம் எதிர்க்கிறோம். ஆங்கிலம் தமிழ் ஆகிய இரண்டு மொழிகளில் இருக்க வேண்டும் என்று சொல்லி வருகிறோம். இந்தக் கோர்ட் ஃபீ ஸ்டாம்பைப் (முத்திரைத்தாள்) பொறுத்தவரை, தமிழ் அதில் இடம் பெறவேண்டும் என்பதை மாநில அரசு மைய அரசுக்கு வற்புறுத்தி வருகிறது.

திரு. ச. அங்குசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முத்திரைத் தாள்களை மாநில அரசு அச்சடிக்கிறதா? அல்லது மைய அரசு அச்சடிக்கிறதா என்று அறியவிரும்புகிறேன்.

1982 பிப்ரவரி 17]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாசிக் என்னும் இடத்திலே மைய அரசு தான் அதை அச்சடிக்கிறது.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோர்ட்டுகளிலே சர்டிபைஃடு காப்பி வாங்குகின்ற சமயத்தில் ஸ்டாக் இல்லாமல் போய்விட்டால் உச்சநீதிமன்றத்திலே இருப்பது போல On payment of cost என்ற முறையில் சாதாரண பேப்பரிலே காப்பி எடுத்து, அதை சர்டிபை பண்ணிக் கொடுக்கிறார்கள். அதைப்போல இங்கே ஜில்லா கோர்ட்டுகளிலும், முன்சீப் கோர்ட்டுகளிலும் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலை பளு குறைவாக இருக்க வேண்டும் என்றும் துரிதமாகப் பணி நடைபெறவேண்டும் என்ற நோக்கத்தோடும் தான் ஸ்டேம்ப் சிஸ்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. கேஷ் சிஸ்டம் என்று கொண்டு வந்தால் சில பிரச்னைகள் உருவாகும். ஆகவே ஏற்கெனவே இவைகளையெல்லாம் ஆராய்ந்துதான் இதில் இந்தியா முழுவதும் ஒரே மாதிரியான முறை நடைபெற்று வருகிறது. இது மிக நல்ல முறை. இதிலே மாற்றம் தேவை இல்லை.

திரு. கோவைத் தம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதாவது ஒரு விதத்தில் இந்தி மொழி எல்லாவற்றிலும் திணிக்கப்பட்டு வருவதை அரசு அறிந்திருக்கிறதா? ரூபாய் நோட்டுக்களில் எல்லாம் தமிழில் எழுத்துக்கள் இருக்கும்போது முத்திரைத் தாள்களில் தமிழ் ஏன் இடம்பெறக்கூடாது? இதை நமது அரசு மைய அரசிடம் கேட்டு அனுமதி பெறுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் சொன்னேன், இந்த முத்திரைத் தாள்களில் தமிழ் மொழி இடம் பெற வேண்டும் என்பதில் நமது அரசு அக்கறை கொண்டு நடவடிக்கை எடுத்து வருகிறது. மைய அரசு அதை நிராகரித்தபோதிலும், முத்திரைத் தாள்களில் தமிழ் மொழி கட்டாயம் இடம்பெற்றேயாகவேண்டும் என்பதை மாநில அரசு மைய அரசுக்கு மீண்டும் வலியுறுத்தும்.

ஆதி திராவிடர்கள் மீதான வழக்குகளை விசாரிக்க தனி நீதிமன்றங்கள்

*வினா எண் *231* திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பரா

ஆதிதிராவிடர்கள் மீதான கொடுமைகளை விசாரிக்க தனிக் கோர்ட்டுகள் அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?